# சங்க கால அக, புற பொருள் மரபு

திரு.கணேசமூர்த்தி ஹரன்
முதுகலைமாணி ( நடனம்)
ஈ.மெயில் – gharran89@gmail.com.

47

**ஆய்வுச் சுருக்கம்**

**“தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்**
**தோன்றலின் தோன்றாமை நன்று”**

என்ற வள்ளுவ பெருந்தகையின் கூற்றுக்கு இணங்க காலங்கள் பல கடந்து ஓடினாலும் அழியாக் காலமாக புகழ்பெற்று நிற்பது சங்க காலமாகும். அன்று இருந்து இன்று வரை தமிழ் மொழி மணம் வீசக் காரணம் சங்க காலத்தில் எழுந்த புலவர்களும், அறிஞர்களும் என்றால் அது மிகையாகாது. சங்ககாலத்தில் இயற்கை மக்களுக்கு ஏதுவாக அமைந்திருந்தாலும், அவர்களது வாழ்க்கையோடு ஒன்றித்து இருந்தாலும் கூட மக்களது வாழ்வியல் அம்சத்தை கூற வந்த புலவன் அவர்களது மனத் தூய்மையையும் காதல் அழகையும் அகப்பொருள் மரபாக வடித்தெடுத்தான். அவ்வாறு கொடுத்த அந்த வடிவம் பின்னர் வீரம் செறிந்த ஆண்மை வலிமையினை கூற வேண்டும் என்பதற்காக புறம் எனும் பாடு பொருளையும் வடித்தான். அவன் வடித்த அகம், புறம் எனும் இரு பொருள்களும் அன்றிலிருந்து இன்று வரை எமக்கு வாழ்வியல் அம்சத்தையும் புலவர்களின் கவியாற்றலையும் எடுத்து இயம்புகிறது. சங்க காலத்தை பின்தொடர்ந்து பல காலங்கள் எழுந்தாலும் சங்க காலத்தில் தோன்றிய இலக்கியங்களும் காவியங்களும் படைப்புக்களும் ஏனைய இலக்கியங்களில் தோன்றவில்லை என்றே கூற முடியும். அதை நயமிக்க கூறினால் சங்க காலத்தில் காணப்பட்ட அகம், புறம் எனும் இரு பாடுபொருளே முக்கிய காரணமாகும்.

சங்க காலம் அன்று விதைக்கப்பட்ட விதைகள் இன்று வளமாக வளர்ந்து கொண்டிருக்கின்றது. அதற்கு அகஇ புற பொருள் முக்கிய சான்றுகளே. இரு மையக் கருத்தின் ஊடாக மக்களது வாழ்வில் அம்சத்தையும் கூறிய புலவன் அதனூடாக மக்களை எவ்வாறு வழிப்படுத்த வேண்டும், எவ்வாறு ஒரு மானிடன் தன்னை நற்பயனாக்கிக் கொள்ள வேண்டும். என்பவற்றைக் கூறி வழி நடத்துவதாக அக்காலத்தில் இலக்கியங்கள் எழுந்துள்ளது. மன்னனிடத்தே சென்று அவனை புகழ்பாடி அவரிடம் இருந்து பொருள் பெற்று வந்தாலும் , பிறிது ஒரு மானுடன் வறுமையால் வாடுகின்ற போது அவனுக்கு உதவி செய்ய வேண்டும் என்று அவனை அரசரிடம் சென்று எவ்வாறு வழிப்படுத்தினால் பரிசீல்கள் பெறலாம் என்பதைப் பற்றியும் கூறி புலவன் வழிப்படுத்துவதையும் சங்க காலத்தில் காணலாம் இதுவே பின்னர் சங்கமருவிய காலம்இ பல்லவர் கால நாயக்கர் காலம் என பல காலங்கள் தோன்றுவதற்கு முதற்காரணமாய் அமைந்தது.

**சங்க கால அகப்பொருள் புறப்பொருள் மரபு**

**சங்க கால அகப்பொருள் மரபு**

“ஒத்த அன்பினரான தலைவனும் தலைவியும் தம்முள் தாம்; எதிர்ப்பட்டு
கூடுகின்ற கூட்டத்தில் பிறந்து இக்காதல் இத்தன்மை ஆனது இவ்வாறானது என்று
பிறரிடம் கூற முடியாது தமக்குள்தாம் இன்புற்றுக்கொள்ளும் அழகிய காதலே”
சங்ககாலத்தில் அகக் காதல் என சிறப்பாக வரையறுத்துள்ளனர்.

இலக்கியமானது தான் வாழுகின்ற தான் எழுகின்ற சூழலுக்கு ஏற்பவே தோற்றம் பெறும். புலவர்களுக்கு இவை ஓர் உந்து சக்தியாக காணப்படும். அக்காலத்தின் வளர்ச்சி எழுச்சி எல்லாவற்றிலும் சூழலின் தன்மைக்கு ஏற்ப இலக்கியங்கள் பல எழும் என்பதே வழக்கு. அந்த வகையில் சங்க பாடலும் அக்கால மக்களது வாழ்வை ஆதாரமாகக் கொண்டு எழுந்தது எனலாம்.மக்கள் ஐவகை நிலத்துக்கு ஏற்ப பிரிந்து வாழ்ந்தபோது அவர்களது தொழில்முறையும் உறவு முறையும் வேறுபட்டது. இந்த இயற்கையோடு ஒன்றித்த மக்களது வாழ்க்கையில் காதல் வீரம் என்ற இரண்டு அம்சங்கள் முக்கிய இடம் பிடித்தது. அக்கால மக்கள் தங்களது இன்பத்திற்காகவும் புகழுக்காகவும் தர வல்ல பல செயல்களை நாடி நின்றனர். இன்பத்திற்காக காதலை செய்த ஆண் பெண்களிடம் தங்களது மனதை பறி கொடுத்தனர். புகழுக்காக வீரத்தை போற்றி நின்றனர.; அதாவது தங்களது ஆண்மையை பெண்களிடம் நிரூபித்தனர். அவ்வகையில் சங்ககாலம் உலகியலில் முதன்மை பெற்றது. குறிஞ்சி நில மக்களின் தொழிலாக தினை விதைத்தலும் வேட்டையாடுதலும் உள்ளது. தினை விளையும் காலங்களில் பறவைகளிடம் இருந்து பயிரை கன்னிப்பெண்கள் செவிலித்தாயின் பாதுகாப்பில் செல்லும் அதேவேளை இளம் காளையரும் வேட்டைக்குச் செல்வதும் வழக்காறாயயிருந்தது. இவ்வாறு தினைப்புணம் காத்திருந்த இளம் கன்னியரும் வேட்டை மேல் மனம் கொண்ட இளம் காளையரும் ஒருவரை ஒருவர் கண்டு காதல் கொள்வதற்கும் காதல் பயிரை வளர்ப்பதற்கும் குறிஞ்சி நிலம் பொருத்தமானதாக இருந்ததனால் காதலின் முதல் படியான புணர்தல் இந்நிலத்திற்கு உரியது. இப்புணர்தல் ஒழுக்கம் இயற்கை புணர்ச்சிஇ இடந்தலைப்பாடுஇ பாங்கல் கூட்டம்இ பகல் குறிஇ இரவுக்குறி என பலவாறாக விரிந்து செல்லும்.; இங்கு இயற்கைப் புணர்ச்சி தொடங்கி வரைவு கடா வரையானவை களவெளுக்கும் எனவும் விரைவுகடாவலின் பின்னரான காலம் கற்பொழுக்கம் எனவும் அழைக்கப்படும்.

காடும் காடு சார்ந்த இடம் முல்லையாகும். இந்த நிலத்தவர்கள் மந்தைகளையும் உடமைகளையும் களவர்களிடம் இருந்து பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டு தமது நிலத்தின் எல்லை புறத்தில் கூதிர் பாசறை வேணில் பாசறை என்பவற்றை அமைத்துக் காவல் இருப்பர். அவ்வாறு காவலுக்குச் செல்கையில் தான் திரும்பி வரும் காலம் இவ்வாறானது என்று தம் தலைவியருக்கு கூறிச் செல்வர். இவ்வாறு அந்த தலைவர்கள் கூறி சென்ற காலம் வரும் வரையும் தலைவியர்கள் தமது துன்பத்தை ஆற்றிக்கொண்டு வீட்டில் இருந்ததால் இருத்தல் முல்லை நிலத்தின் சிறப்பொழுக்கம் ஆயிற்று. இதனை நெஞ்சாற்றுப்படை என்றும் அழைப்பர். இங்கு பெரும் பொழுது கார்காலமாகவும் சிறுபொழுது மாலைக்காலமாகவும் இருந்தது.

மருத நிலம் நீர் வளம் செறிந்தது. சிறு முயற்சிக்கும் பெரும் பயனை கொடுக்கும். இதனால் உழவுத் தொழிலை மேற்கொண்ட மக்கள் செல்வ செழிப்பு உடையவராய் இருந்தனர.; இவர்களுக்கு ஓய்வு

நேரம் அதிகமாக இருந்தது. இதனால் மருதநில தலைவர்கள் தாம் செய்ய வேண்டிய தொழில்கள் எல்லாவற்றையும் பகல் பொழுதில் செய்து விட்டு இரா பொழுதில் பாணர்இ பரதயர் வாழ்கின்ற சேரிப்புறங்களுக்கு சென்று அவர்களது ஆடல் பாடல்கள் கண்டு ரசித்தனர். இவ்வாறு இரவின் பெரும் பகுதியை பரதயர் சேரியில் கழித்து விட்டு பின் இரவில் அத்தலைவர்கள் தமது வீட்டுக்கு திரும்புகின்ற செயல் அவர் தம் தலைவியருக்கு ஊடல் விழைவிப்பதாக இருந்தது. இந்த ஊடல் பின்னர் கூடலில் முற்றுப் பெறுவதால் மருத நிலத்தின் சிறப்பு ஒழுக்கமாக ஊடல் கொள்ளப்பட்டு வருகிறது. மருத நிலத்தின் பரத்தமை ஒழுக்கத்தின் அபரிதமான வளர்ச்சியே சங்ககால வீழ்ச்சிக்கு காரணமாகிவிட்டது.

நெய்தல் நிலத் தலைவன் மீன்பிடிக்க கடலினுள் அதிகாலையில் செல்வது வழக்கம். அவ்வாறு சென்ற தலைவன் பொழுது சாயும் நேரம் வந்ததும் கரைக்கு திரும்பா விடின் தலைவியரது உள்ளம் சஞ்சலப்படும். ஏனைய தலைவர்களும் தலைவியர்களும் ஒன்றாக சேர்ந்து நெய்தல் நிலச்சோலைகளை இன்புறுவதை கண்டதும் இன்னும் நானும் தலைவனும் இன்பமாக இருக்க முடியவில்லை என்ற ஏக்கம் ஒருபுறமும் தலைவனை காணாததனால் அவன் மாண்டானோ புயலில் சிக்குண்டானோ என்ற ஏக்கம் ஒருபுறமும் உற்றார் உறவினரும் மாலைப்பொழுதில் கடற்கரையில் கூடி இரங்கி நிற்பதனால் இரங்கல் இந் நிலத்தின் சிறப்பொழுக்கமாயிற்று.

தமிழகத்தின் புவியியல் அமைப்பில் மிகவும் வறண்ட பிரதேசம் பாலை நிலம். இதனால் இந் நிலத்தைக் கொண்டு எந்த தொழிலும் செய்ய முடியாத சூழலில் ஆறலைத்தல் வழிப்பறி எனும் களவினை தமது பிரதான தொழிலாகக் கொண்டனர.; தம் தலைவியர்களைப் பிரிந்து செல்ல வேண்டிய தேவை ஏற்பட்டதனால் பிரிதல் பாலை நிலத்தின் சிறப்பு ஒழுக்கம் ஆயிற்று. சிலவேளை தலைவன் தலைவியாகிய இருவரும் ஒருவரை ஒருவர் பிரிந்து செல்ல முடியாத அன்பு பிணைப்போடுடையவர்களாயின் அங்கு இருவரும் ஒன்றாக பாலை நிலத்தை விட்டு பிரிந்து செல்வதுண்டு. இதனை உடன் போக்கு பாலை என்றும் அழைப்பர.; இந்த உடன் போக்கினை பட்டினப்பாலை என்ற சங்க இலக்கியம் அழகாகப்பாடுகிறது. ஐவகை நிலங்களிலும் ஐவகை ஒழுக்கங்கள் இருந்தாலும் அந்தந்த நிலத்திற்கு ஒழுக்கங்கள் சிறப்பு ஒழுக்கமாக கொள்ளப்படுகிறது. நிலம் தொழிலை நிர்ணயிக்க தொழில் காதல் ஒழுக்கங்களை நிர்ணயித்துத. இவ்வன்பின் ஐந்திணைக்கு அப்பால் கைகளை இரண்டு ஒழுக்கங்கள் உள்ளது. கைகளை என்பது ஒரு தலைக்காமம.; இது தலைவன் தலைவியராகிய இருவரும் யாரேனும் ஒருவரது மனதில் தோன்றி மறையும் காதல் கைக்கிளையாகும். இது மூன்று வகைப்படும்.

பக்குவம் அடைந்த தலைவன் பருவம் அடையாத பேதை பெண் ஒருத்தியைக் கண்டு அவருக்கும் தனக்கும் இடையில் காதல் என்று பலவாறு சொல்லி இன்புறுதல் கைக்கிளையாகும.; இது அடங்காக் காதலின் வெளிப்பாடு எனவே சொல்லலாம்.

ஒத்த வயதினர் ஆகிய தலைவனும் தலைவியும் விதிவசத்தால் ஒருவரை ஒருவர் சந்திக்கின்ற பொழுது பெரும்பாலும் தலைவனுடைய உள்ளத்தில் தோன்றி மறைகின்ற காட்சி, ஐயம, தெளிவு, தேறல் எனும் செய்திகளை கைக்கிளையின் பால்படும் .

கொல்லேறு தழுவுதல் முதலான மணமுறைகள் சங்க காலத்தில் சுயம்வரத்தின் மூலம் தலைவன் தெரிவு செய்யப்படுவதனால் கொல்லுகின்ற தன்மை வாய்ந்த காளை மாட்டினை யார் அடக்குகின்றானோ

அவனுக்கு பெண் கொடுக்கும் வழக்கம் இருந்தது. ஆனால் ஒரு பெண் மீது பலர் ஆசை கொண்டிருந்தாலும் காளை மாட்டை அடக்கியவனைத் தவிர மற்றவர்கள் அதன் நிலை ஒரு தலை காதலாகிய கைக்களையின் பால்படும்.

பெருந்தினை என்பது பொருந்தாக் காமம். ஒருவன் ஒருத்தியிடம் மிக்க காமதவனாகி அவளை அடைய பெறாமல் மடலேறுதல் வரைபாயுதல் என்னும் இரண்டு அடிப்படையில் உயிரினை மாயிப்பது பெருந்திணையாகும்.; மடல் ஏறுதல் என்பது காதல் தோல்வியை தாங்க முடியாத தலைமகன் பனைமட்டையின் கருப்புகள் மேலே தெரியும் வகையில் மடல்மா என்கின்ற குதிரையை செய்து தனது மார்பில் எப் பெண்ணினால் ஏமாற்றப்பட்டனோ அபபெண்னின் உருவத்தை வரைந்தவாறு குதிரையில் அமர்ந்து வீதியோரம் வலம்வந்து மடல் மாவின் கருகுகள் உடலை வட்டி இரத்தம் பாய உயிரை மாய்ப்பது பெருந்திணையாகும்.

வரைபாய்தல் என்பது காதல் தோல்வியை தாங்க முடியாத தலைவன் உயர்ந்த மலையின் மீது ஏறி அங்கிருந்து குதித்து தன் உயிரினை மாய்ப்பது வரை பாய்தல் என்று அழைக்கப்படும்.

**சங்க காலப் புறப்பொருள் மரபு**

புறத்திணை என்பது பெயர் சுட்டிய பாடல்களின் தொகுதியாகும். இது அரசனது வீரம், வெற்றி, கொடை, ஆட்சி சிறப்பு, புகழ் என்பவற்றையும் மக்களது வாழ்க்கை, நாட்டினது அரசியல், பொருளாதார நிலைமை, சமூக நிலைமை, மக்களது சமயநிலைமை, நிலையாமை வாழ்க்கையின் நோக்கங்கள, தத்துவங்கள, அரசனுக்கு புலவர் கூறுகின்ற அறிவுரைகள் மற்றும் பெயர் சுட்டிய காதல் பாடல்கள் புறப்பொருள் மரபினுள் அடங்கும். புறத்திணை இலக்கியங்களை பொறுத்தவரையில் ஐவகை நிலங்களுக்கும் ஐவகை போர் ஒழுக்கங்கள் வகுக்கப்பட்டுள்ளன. இந்தப் போர் ஒழுக்கங்கள் கூட இயற்கையோடு இணைந்தது. அகத்திணையில் ஐவகை நிலங்களுக்கும் ஐவகை தாவரங்களின் பெயர்கள் வைக்கப்பட்டது, போல் புறத்திணையில் ஐவகை நிலங்களும் ஐவகை பூக்களின் பெயர் வைக்கப்பட்டுள்ளது.

குறிஞ்சி –வெட்சி

முல்லை - வஞ்சி

மருதம் - உழிஞை

நெய்தல்- தும்பை

பாலை - வாகை

எனவும் அழைக்கப்பட்டது. இந்த ஐவகைப்போர் ஒழுக்கங்களுக்கு அப்பால் காஞ்சித் திணை பாடாண் திணை என்ற இருவகையான புற ஒழுக்கங்கள் என ஏழாக பிரிக்கப்பட்டுள்ளது. குறிஞ்சி நிலத்தை தலைவர்கள் பிற நிலத்து மந்தைகளை களவில் கொண்டு போதல் காரணமாக ஏற்படும் பூசல் வெட்சி எனப்படும். ஆணிரை கவர்தல் தொடர்பான இப்போரின் போது குறிஞ்சி நிலத் தலைவர்கள் வெட்சிப் பூவை சூடிச் செல்வதனால் குறிஞ்சியின் புற ஒழுக்கம் வெற்றியின் அடையாளமாக அழைக்கப்பட்டது.முல்லை நில மக்கள் தம் பகைவரை அடக்கும் பொருட்டு தம் நிலத்தின் எல்லைக்குள் சென்று வேனில் பாசறை கூதில் பாசறை என்ற பாசறைகளை அமைத்து நிகழ்த்திய

போர் வஞ்சி எனப்பட்டது.

பிற நிலத்தவர்கள் கவர்ந்து செல்லும் மந்தைகளை மீட்பதற்காக முல்லை நிலத்தவர் புரிந்த போர் வஞ்சி எனப்படும். இப்போரின் போது அந்நிலத்தவர் வஞ்சிப் பூவினை சூடிச் செல்வர்.மருத நிலத் தலைவர்கள் தமது நிலத்தையும் நிலத்தில் உள்ள செல்வங்களையும் பாதுகாத்தல் பொருட்டு செயற்கையாக அரண் அமைத்து காவல் இருப்பது வழக்கம். இந்த அரணுக்கு அகத்தே இருக்கின்ற படைக்கும் அருணுக்கு புறத்தே அதை முற்றுகையிட விரும்பிய படைக்கும் இடையே நிகழ்ந்த போர் எனப்படும். இங்கு உழிஞை பூவினை சூடி செல்வர்.

நெய்தல் நிலத்தில் காலமும் இடமும் குறித்து போர்கள் இடம் பெற்றன. இதனை தும்பை என்பர். நெய்தல் நிலத் தலைவன் தம் புகழினை உலகோர் புகழ்தலை பொருளாகக் கொண்டு பகை அரசர்கள் மேல்செல்ல பகையரசனும் அந்தப் புகழே கருதி ஒரு களத்தில் எதிர்த்து அவன் வலிமையினை அழித்தல் தும்பை எனப்படும.; இங்கு நெய்தல் நிலத் தலைவன் தன் சக வீரர்களை எல்லாம் இழந்த நிலையிலும் தனித்து நின்று போராடுவதும் அவனுக்கு அருகில் வந்து போராடிய பிறநிலத்து வீரர்கள் தூரத்தில் நின்று அம்பினால் எய்வும் வேலினால் எறியவும் தன் தலை அறுபட்ட நிலையிலும் அவன் கைகளில் இருந்து அம்புகள் பாய்வதாக நெய்தல் நிலத் தலைவனது வீரத்தை சிறப்பித்து பாடுவது தும்பையாகும்.

பாலை நிலத்தில் வாழ்வோர் மறவர்கள். மறவர் என்றால் வீரர் என்று அர்த்தம். இவர்கள் போருக்கு செல்லும் போது வாகை பூவினை சூடி செல்வதனால் இவர்களது போர் ஒழுக்கம் வாகை எனப்பட்டது. இந்தப் பாலை நிலத்து மறவர்கள் பிறநிலத்து மீது போர் கொண்டு சென்று தோல்வியை தழுவுவது கிடையாது. இதனால் இவர்கள் சூடிச் சென்ற வாகை வெற்றியின் அடையாளமாக கொள்ளப்படுகிறது.

இந்த ஐவகை பிற ஒழுக்கங்களுக்கு அப்பால் காஞ்சித் தினை, பாடாண் திணை என்ற இரண்டு பிற ஒழுக்கங்களும் உண்டு. காஞ்சித்தினை என்பது நிலையாமையை குறிப்பது. யாக்கை, வாழ்க்கை, இளமை, செல்வம் என்பவற்றின் நிலையாமை கூறுவது இதுவாகு.; இது ஆண்பால் காஞ்சிஇ பெண்பால் காஞ்சி என்ற இரண்டு வகைகளை கொண்டுள்ளது.

ஆண்பால் காஞ்சி இரண்டு வகைப்படும்.

1.போர்க்களத்தில் விழுபட்ட ஒரு வீரன் அப்புண்ணை ஆற்றிக்கொண்டு இவ்வுலகில் வாழ விரும்பாது வேலினால் அப்புண்ணை குத்தி கிழித்து இறந்து போதல் ஆண்பால் காஞ்சியாகும.;

2. போர்க்களத்தில் இறந்து போன ஒருவனது சடலத்தை நாய், நரி தீண்டாது சக வீரன் அல்லது அவனது மனைவி பாதுகாத்து நிற்றலும் ஆண்பால் காஞ்சியாகும் .

கணவன் போரிலே வீர மரணத்தை தழுவுகின்ற போது அவனுடைய மனைவி கைம்மை நோன்பினை நோக்க விரும்பாது அவனுடைய சடலத்தை தழுவிக் கொண்டு அழுதல், உடன் உயிர் நீத்தல், உடன்கட்டை ஏறுதல் என்பன பெண்பால் காஞ்சியாகும்.

பாடாண் திணை என்பது பாடு ஆண் திணை எனப் பிரிந்து பாடப்படும். ஆண் மகனது ஒழுகலர்று எனப்படும். இவ்வகையில் அரசன் முதலானோரின் நட்புச் செயல்கள் என்பவற்றை வாழ்த்துதலும் அரசர்களுக்கு அறிவுரை கூறுவதும் பாடாண்திணையில் அடங்கும். வாழ்த்து செய்யுள்களில் அரசரஇ;

முனிவரஇ; பார்ப்பனரஇ; பசுஇ நாடுஇ மலை என்னும் ஆறு வகையாக வாழ்த்தப்படும். அறிவுரை கூறும் பாடல்கள் அரசனுக்கான ஒழுக்கங்களாக கூறப்படும.;

“நெல்லும் உயிர் அன்றே நீரும் உயிர் அன்றே
மன்னர் உயிர்த்தே மலர்தலே உலகம்
எனவே தான் உயிர் என்பது அறிகை
வேல்மிகுதானே வேந்தர்க்கு கடனே. ”

மோகிகீரனார் பாடாண்திணையில் பாடியுள்ளார். இவ்வாறு ஒரு அரசினது போர்இ வீரம் என்பவற்றை பாடுதல் மிக முக்கிய புறப்பொருளாக காணப்பட்டது. அரசர்களது புகழ் பாடும் போது அவ்வகையில் அரசனது வீரம்" கொடை ஆட்சித்திறன் தோற்றப்பொலிவு என்பனவும் புகழ்ந்து பாடுவது முக்கிய மரபாகும்.

“உடாஅ போரா ஆடுதல் அறிந்தும்
படாஅம் மஜ்சைக்கு ஈர்தத எம் கோ
கடாஅ யானை கலிமான் பேகன்”;

அதாவது மயிலானது உடுக்காது போர்க்காது என்பதனை அறிந்திருந்தும் மயில் போர்வைக்காக அகவுகிறது என்று கருதிக் கொண்டு பாண்டிய மன்னன் தனது உடையினை அதற்காக வழங்கினார் என்று பாண்டிய மன்னனது சிறப்பு, கொடை, வள்ளல் என்பன இதன் மூலம் தெரிய வருகிறது.

மேலும் வாழ்க்கைத் தத்துவங்களும் நோக்கங்களும் குறிப்பிடப்படும்;.

“யாதும் ஊரே யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர் தர வரா”

அதாவது எல்லா ஊரும் எமது சொந்த ஊரே, எல்லோரும் எமது உறவினரே, தீமையும் நன்மையும் பிறருக்கு செய்யாவிடின் எவையும் நம்மை அணுகாது என்ற தத்துவங்கள் வாயிலாகவும் இக்காலப் புலவர்கள் புறபொருள் மரபுனை குறிப்பிட்டுள்ளனர்.இவ்வாறு பல இலக்கியங்கள்இபல புலவர்கள் முதன்மைக்காலமான சங்க காலத்தில் தோன்றி தமிழ் எனும் மொழிப் படைப்பை வளர்த்து ஏனைய காலங்களிலும் தமிழ்மொழி ஓர் செம்மொழியாம் முத்தமொழி என தடம் பதிப்பததிற்கு சங்க காலம் உறுதுணையாக இருந்தது எனலாம்.இவ்வாறு சங்க காலத்தில் காதல், வீரம் மன்னனது சிறப்பு, கொடை, வள்ளல், புலவர்களது கவி ஆற்றல், தமிழ்த் திறமை, அறிவுரைப்பாங்கு என்பன எழுந்த ஓர் பொற் காலம் சங்க காலம் என்றால் அது மிகையாகாது. இதனை அடியொட்டியே ஏனைய காலங்களும் தோன்றின எனலாம்.

திறவுச்சொற்கள்

வடித்தான் - உருவாக்கினான்

வாகை – வெற்றிச்சின்னம்

கைகளை - ஒரு தலைக்காமம் ( ஒருவருக்கு மட்டும் தோன்றும் காதல்)

உயிர் கட்டை ஏறுதல்; – கணவன் இறக்க அவனுடன் தீக்குழியில் இறங்குதல்

கடாஆ - பெரிய

யாதும் - எல்லாம்

உசாத்துணை நூல்கள்-

1. தமிழ் இலக்கிய வரலாறு - பேரா.சி.கி.இலட்சுமணன்- கிருஷ்ணா வெளியீடு- பக்கம்-11

2. தமிழ் இலக்கிய வரலாறு - தெ.பொ.மீகளஞ்சியம் - மணி ஆப்செட் - பக்கம் - 21

3. தமிழ் இலக்கிய வரலாறு – கார்த்திகேசு சிவத்தம்பி – பவாய் பிறின்ரேர்ஸ்- பக்கம் - 55

4.hவவிள:ஃஃவய.அ.றமைipநனயை.ழசபஃறமைiஃமூநு0மூயுநுமூடீ5மூநு0மூயுகுமூ86மூநு0மூயுநுமூடீ1மூநு0மூயுநுமூடீகுமூநு0மூயுநுமூயுகுமூநு0மூயுநுமூடீநுமூநு0மூயுநுமூ9குமூநு0மூயுகுமூ8னுமூநு0மூயுநுமூ9குமூநு0மூயுகுமூ81சூ:~:வநஒவஸ்ரீமூ

5.hவவிள:ஃஃவய.அ.றமைipநனயை.ழசபஃறமைiஃமூநு0மூயுநுமூயுநுமூநு0மூயுகுமூ81மூநு0மூயுநுமூடீ2மூநு0மூயுகுமூ8னுமூநு0மூயுநுமூடீ2மூநு0மூயுகுமூ88_(மூநு0மூயுநுமூயு4மூநு0மூயுநுமூடீகுமூநு0மூயுநுமூயு3மூநு0மூயுகுமூ88)சூ:~:வநஒவஸ்ரீமூநு0மூயுநுமூயுநுமூநு0மூயுகுமூ81மூநு0மூயுநுமூடீ2மூநு0மூயுகுமூ8னுமூநு0மூயுநுமூடீ2மூநு0மூயுகுமூ88மூ20

6.hவவி:ஃஃறறற.வயஅடைளரசயபெயஅ.inஃடவைநசயவரசநளஃநவவரவாழபயiஃமரசரவொழமயiஃமரசரவொழமயi_126.hவஅட

7.hவவி:ஃஃயெடடயமரசரவொழமயi.டிடழபளிழவ.உழஅஃ2015ஃ05ஃ21.hவஅட?அஸ்ரீ1